# இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகத்தில் இலங்கை - இந்திய சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் ஏற்படுத்திய தாக்கம்: ஈர்வை மாதிரியுரு ஆய்வு

**ஏ.ஏ.எம்..நுபைல்,**
சிரேஷ்ர விரிவுரையாளர்
இலங்கை தென் கிழக்குப் பல்கலைக் கழகம்.

**ஆய்வுச் சுருக்கம்**

இலங்கையில் 1977 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த ஐ.தே. கட்சி அரசாங்கத்தால் 1978 ஆம் ஆண்டு அறிமுகம் செய்துவைக்கப்பட்ட திறந்த பொருளாதாரக் கொள்ளகையடுத்து இலங்கை பல்வேறு நாடுகளுடனும் இருபக்க சுதந்திர வர்த்தக ஒப்ந்தங்களை மேற்கொண்டு வந்துள்ளது. இவ்வகையில், 1998 ஆம் ஆண்டு இலங்கை-இந்திய உயர் அரசியல் மட்டத்தில் இருபக்க சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு 2000 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைமுறைப்படுத்தப்பட்டது. 2008 ஆண்டுடன் இவ் ஒப்பந்தத்திற்கு 10 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. கடந்த ஒரு தசாப்பத காலத்திலும் இவ் ஒப்பந்தத்தின் மூலம் அடையப் பெற்றுள்ள பொருளாதார பலாபலன்களை மதிப்பீடு செய்வதே இவ் ஆய்வுக் கட்டுரையின் நோக்கமாகும். உண்மையில், சப்ரா மற்றும் சப்டா (SAPTA & SAFTA) ஆகியவற்றுக்கு அப்பால் இவ் ஒப்ந்தமானது இரு நாடுகளின் வர்த்தக செயலாற்றலில் குறிப்பிடத்தக்க மைல்கல்லாக அமைந்துள்ளது. குறிப்பாக இரு நாடுகளுக்குமிடையே நெருங்கிய பொருளாதார உறவுகளை ஏற்படுத்திக் கொள்ள இவ் ஒப்பந்தம் துணைபுரிந்துள்ளது.

இவ் ஆய்வுக் கட்டுரை சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் விளைவு குறித்த அளவுசார் மதிப்பீட்டை வழங்க முற்படுவதுடன், ஒரு சில பேரினப் பொருளாதாரக் குறிகாட்டிகள், உட்-பிராந்திய வர்த்தகம், வெளிநாட்டு வர்த்தகம் பற்றிய எதிர்வு கூறல்களையும் தருகின்றது. அத்துடன், இலங்கையின் வெளிநாட்டு வர்தகக் கட்டமைப்பில் சுதந்திர வர்தத்கததின் தாக்கத்தையும், இலங்கை-இந்திய சுதந்திர வர்த்தக முன்னேற்றத்தையும் ஆய்வு செய்கிறது. இவ் ஆய்வானது, எம்மால் சேகரிக்கப்பட்ட இலங்கை-இந்தியா ஆகியவற்றின் இருபக்க வர்த்தகதின் குறுக்கு வெட்டுத் தரவுகள் மற்றும் காலத் தொடர் வரிசைத் தரவுகளைக் கொண்டமைந்த ஈர்வை மாதிரியுருவை (Gravity Model) மினிரெப் மென்பொருள் (Minitab Model Version 14) மூலம் பரீட்சிக்கப்பட்டதாகும்.

ஈர்வை மாதிரியுருவின் முடிவானது, இலங்கை-இந்திய சுதந்திர வர்த்தக அனுபவமானது இரு நாடுகளுக்கும் பொருளாதார நலன்களை எடுத்து வந்துள்ளதையும் குறிப்பாக இலங்கைக்கு கூடியளவு சாதகத்தை தந்துள்ளமையையும் காட்டுகிறது. அத்துடன், ஒப்பந்திலுள்ள "எதிர் மறைப் பட்டியல்" (Negative List) இரு நாடுகளின் சுதந்திர வர்த்தகத்துக்கு எவ்வித சாதக நிலையும் எடுத்து வரவில்லை. மேலும், இரு நாடுகளுக்குமிடையில் வர்த்தகத்தை தாராளமயமாக்கியதால் கைத்தொழில் துறை ஏற்றுமதியானது விவசாயத் துறை ஏற்றுமதியிலும் பார்க்க கூடுதல் சாதக நிலைமையை

*அனுபவித்துள்ளது. அதே முடிவிலிருந்து, சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தையடுத்து இரு நாடுகளுக்கும் இடையில் வெளிநாட்டு வர்த்தகத்தில் குறிப்பிடத்த வர்த்தக விரிவாக்கம் (Trade Creation) ஏற்பட்டுள்ளதையும் அதே நேரத்தில், வர்த்தத் திரும்பல் (Trade Diversion) எதுவும் ஏற்பட்டிருக்கவில்லை என்பதையும் அறிய முடிகிறது.*

*ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எதிர் மறைப் பட்டியல் எதிர்காலத்தில் விலக்கிக் கொள்ளப்படுமிடத்து (பூரண சுதந்திர வர்த்தகம்) இரு நாடுகளின் வெளிநாட்டு வர்த்தகத்தில் மேலும் குறிப்பிடத்த வர்த்தக விரிவாக்கம் ஏற்படும். மேலும், SAPTA மற்றும் SAFTA கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள பொருட்களுக்கு அப்பால் புதிதாக வேறு சில வர்த்தப் பொருட்களை இணைத்துக் கொள்ளுமிடத்து இலங்கையின் வர்த்தக நிலுவையின் சாதகமற்ற போக்கை குறைத்துக் கொள்ள முடியும்.*